இவற்றை யுணரு மறிவில்லாத படுபாவியார் மேல சிவவாக்கியத்தைப் பாழாக்கவந்தபடி அவர் மதத்தை யாமுஞ் செய்யவலியற்றோமா? எமமதச்சாரபேயன்றி யினமாரககவகளுக்குமே யன்றோ வதனை யநவயிககவ லலேம்? சிவனுர்க்குவந்த ஹத்தியைத் தனது ரகத பிக்ஷையால் விஷ்ணுமாற்றினுரெனவும், அது ஏசு என்பவர் தனது ரகததா லுயிர்கள் பாவத்தைப் போகினுரென்பதற கொக்குமெனவும், ஏசுவுக்குக் கிறிஸ்து வென்னும்பேரிருப்பதுவே கிருஷ்ணனைக் காட்டுமெனவும், அவனைச் சார்ந்தவப்போஸ்தலர் பன்னிருவருளரென்பதே பன்னிரண்டாழ்வார்களைக் காட்டுமெனவும், அவ்வேசுமதத்தில் மோக்ஷவீட்டுக்குச் சுண்ணும்புகல் முதலியன கொண்டு ஏறிப்போகப் படிகட்டி வருகையிற்றடையுண்டுபோயிற்றெனக் கூறியுள்ளதே பாஞ்சராத்திரப் பிரவிஷ்டர் தம்முளு மப்படி நிகழ்ந்ததாகக் கூறுமாண்மியங் காட்டுமெனவுஞ் சமர்த்திப்பதேயாம். இதனுல், ஒருமதமே யன்றோ பாஞ்சராத்திரம, கிறிஸ்து மார்க்கமென்னும் பரியாயநாமங்களால் வர்த்திப்பதாகக்கொள்ள விடந்தருகின்றது? இவ்விரு மதங்களோடு

மொற்றுமை செய்யவேண்டுமென்னு மெண்ண மெமக் கில்லாமையா லிவ்வளவில் விடுத்தனம்.

மேலுண்மையால் (மண்டையேந்துகையனை) என்று சிவவாக்கியர் கூறிய தன்மை வெளிப்பட்டது. மண்டைபிரமனதும், அதிலுள்ள இரக்தம் விஷ்ணுவினது மாலுகையா லவ்விருவருகரும் பரனுனதன்மை சிவனிடம் சித்தித்தது. இதனுல் சிவனருள்பெற்ற மேலோரைப் பிரமவிஷ்ணுக்கள் வணங்குதல செய்வாரென்பது தோன்றவே (பண்டைமாலயனறெழப்பணிந்துவாழலாகுமே) என விதந்தனராகப்பரமபண்டிதராயுள்ளபெரியோர்பொருளாவிரிப்பர். இந்தவியவஸ்தாவிசாரத்தால் மேலபார்த்தருசெய்யத்தலை நீட்டிய தாதனுரைதடுமாறியது காண்க.

இங்ஙனநிற்க, மேலபசல்யார்த்தத்தையே யவலம்பித்து வேதபாஹ்யனுகிய சடகோபனுந் தனது தப்புரையில (பேசுநின்றசிவனுகரும் பிரமனுதனக்கும்பிறர்க்கும், நாமகனவனே சபாலநன்மோக்கதுர்க்கண்டுகொண்மின்) எனக் கூறியுள்ளானுகையால, யாமிதுவரை செயதுவந்த வுபநியாசத்தைத் தரிசித்தபேர்க்கதுவுந் துசசமாகவே கழித்தலமைதிபெறுமென்க. கபாலநன்மோக்கம் என்றபடிப் பிரமகபாலம் சிவனுர்கையில்அபாவத்தையடையவேண்டியதாக வப்படிக்கின்றி யவருடையவுபாங்கங்களி லொன்றுகச சாசுவிதநிலையினதாக வவர்திருக்கரத்தி லெஞ்ஞான்றுமஃதமைதல் சுருதிநிஷ்டமெனினப் பேயுரைக் குபஜீவனமெங்கேயுண்டாம்? தோஷமாக வந்திருப்பினன்றே தந்நிவிர்த்திக்கிடம்பெறும்? பிரம்ஹாவிஷ்ணுவாதி சேதனகோடிகள் கர்வாபஹாரங்காரணமாகத் தாங்கியிருத்தலா லதற்கபாவ மோர்போது முண்டாகாதென்க. கபாலம் சிவனுர்கையி னீங்கியதுண்டெனினவரைக் கபாலபாணியென்று நூல்கள் முறையிடுவதெற்றுக்கு? முன்னர்ப்பற்றியிருந்த சம்பந்தத்தாலெனின்,

அப்படியேயன்றோ பிரமனிடமு முன்சம்பந்தத்தால் ஐம்முகன் என்னு நாமம் பாராட்டல்வேண்டும்? நான்முகன், சதுர்முகனித்யாதி நாமங்களன்றி யங்யதாவழங்க ஹேதுவில்லாதபோது, சிவனுரிடமாத்திரம்பூர்வஸ்திதியை நோக்கலாயிற்றென்ப தென்னபேதமை? இதனுல் சிவனுர்க்கு ஹத்தியால் பிரம்ஹகபாலசம்பந்த முண்டாகாமையால் தேவதாந்தர நிக்ரஹாநுக்ரஹத்வ சாமர்த்திய சீலத்தைக்காட்டு முபாங்கமாகச சிவனுரதனைத் தரித்திருப்பது காலத்திரயாபாத்யமாய் அபாவத்தையடையாதென்றே நிசயிக்கப் படுமையால், அதற்க பாவமுரைத்த சடகோபன்முகததில சாணம் விழுந்ததென்க.

இனி, அந்தியஜன்குஞ்சுகளில் சிரேஷ்டனுகிய குருரனென்றுவழங்கிவருங் குருட்டுத்தாதனெருவன் இருந்தவிடந் தெரியாமல காஷாயதண்டவிசாஜனனுயோடியொளித்த தனதுபாமார்த்த குருவைசசோழமகாராஜன் பயத்தினின்றுங் காப்பாற்றுமபொருட்டு அவனைப போல் தான் வேஷம்போட்டுக்கொண்டுவந்து அரசனுல் கண்தோண்டப்படடு அவமானமெய்திய காலையில் "ஶிவாத்பரதரம்நாஸ்தி" என்று அரசர்கோமான் கையொப்பம் வைக்கசசொல்லிக் கேட்டதற்கு (த்ரோணஸ்திதஃபரம்) எனவக்குரூரன் பதிலாக விபரீதஞ்செய்தானுகத் தாமுங் கூறிக்கொண்டு வருமவ்வுண்மையையு நோககாமல் மேலே (மண்டையேநதுரையனை) என்பதற்குப் பொருள் விரித்ததுபோல் (ஶிவாத்பரதரம்நாஸ்தி) என்பதற்கும் அக்கோளகப்புலையர் செய்த வியாக்யானத்தையீண்டுச் சற்றுவிரிப்பாம்.—மேல்வாக்கியத்தில் (பரதரசப்தத்திலே 'தரப்பாலேசிவனுக்கு மேற்பட்டவனுக்கு மேற்பட்டவனைச் சொல்லுகையாலே) என்றுகூறி (இவ்வளவுரீலே சிவபரத்வம் சித்திக்கமாட்டாதல்லவா?) என்று சந்தோஷித்தனர்.. இதைப் பரி

யாலோசிக்கில் அம்மூதேவிமகனுர் தன்மையே பிரகாச மாயிற்று. (சிவாத்பரதரம்) என்பதில் சிவனுக்குப் பர மாயுள்ளதற்குப் பரமென்று இப்பெரும்புலையர் பொ ருள்கொண்டபடியே யிவர்கள் குருரனுங்கொண்டிருப் பரூகில் சிவம்=குறுணியெனவும், சிவாத்பரதரம்=கு றுணிக்கு மேலானபதக்கெனவும் பொருளுண்டாக (து ரோணமஸ்தி த்தஃபரம்) என வேறுவாக்கியமொன்றை யவனெழுதநேரிட்டதென்னை? துரோணத்துக்கு மேலி ட்ட (முககுறுணிபரம்) என்னும் பொருளுண்டாகவன் றோ வவனெழுதல்வேண்டும்? அங்ஙனமெழுதாமையா ல் குருரனும் சோழமகாராஜனைப்போல் தவறினனெ ன்றேயன்றோ சொலலவரும்? தங்கள்குருரனைவிட்டு அரசர்கோமானைமாத்திரம் பாழ்வாய்திறந்து பழியுரை த்தவப்பதடியை யென்னசெய்யலாம்? அவன் சித்தாந் தப்படிசசிவஸ்தானத்தில் குறுணியளவையானபடியே, பிரமனது ஸ்தானத்தில பதக்கும், விஷ்ணுஸ்தானத்தில் முக்குறுணியு மளவைகளாகவேண்டியபடியால். "சிவா த்பரதரம்" என்ற மேலிடத்தில் பரத்துக்குமேலிட்ட பரம் என்று விபரீதப்பொருள்கொண்ட வவ்விழுதை யார் பின்வாக்கியங்களைச் சற்றேயூகிப்பாராக. (परात्परत र ब्रह्म) என்று சுருதியிலும், "नान्यो देवमहं मन्ये रुद्रा त्परतरं महत्" என்று மங்கணிகர் வசனமாகப் பாரதத் திலும், "भूतं परतरं मत्तः क्षीरपिनवद्यते" என்று பிரம்ஹ தேவர் வசனமாக ஷை பாரதத்திலும் பெறப்பட்டவாக் கியங்களிற் போந்த பரதரசப்தங்களுக் கென்ன விபரீத ப்பொருள் சொல்லித் தலைநீட்டுவாரோ அறியேம். மே ல்வாக்கியங்களுக்கு முன்னமேதானே வியாக்கியாதாக் களேர்ப்பட்டுப் பொருள்விரித்துள்ளாராகையா லவற் றோடு முரணி யவ்வந்தியஜமதப்பிரஷ்டர் கோடுகோ டெனப் புலம்புவாரொனி னதைப்பெரும் பிதற்றெனக்

கழிப்பதன்றி யாரோ சம்மானிப்பவர்? இன்னும் விரிக்கிற் பெருகும்.

இனி, "మృగోనభీమః కుచరో గరిష్ఠాయస్యోరుమత్రిమ క్రమణేషు" என்னும்வசனமொன்றைத்தீட்டி யாதொருநாராயணனுடைய மகாவைபவ சாலிகளுமாய் மூன்றுபடிப்பட்டதுகளுமா யிருந்துள்ள அளக்கிறவியாபாரங்களிலேபீமசப்தவாச்யனுய்ப் பயங்கரனுனருத்ரனுவன்மான்குட்டியோடொத்தவனுக ஹிமவத்பர்வதத்திலே முடங்கிக்கிடந்தானென்று வியாக்கியானஞ்செய்துபுலம்பினர். மேல்வசனத்தில் பதம்பிரித்துரைக்கவந்த வப்பண்டிதக்கழுதையாவார்ஹிமவத்பர்வதத்திலென்றுபொருள்கூறியதற்குஅங்கேயிடங்கொடுத்தபதமேது?(ம்ருகோன) என்பது மான்குட்டியோ டொத்தவனுக வென்று எப்படிப்பொருள்தரும்? பீமசப்தம் ருத்ரபரமாகப் பிரகிருதத்தில் வினியோகந்தேடியதும், சரிஷ்டா, குசரஃ என்னுஞ் சப்தங்களுக்குப் பொருள்கூறியதுந் தலையெடுக்காது! எடுக்காது!! எங்ஙன மெனின், மேல்வசனம் "మృగోనభీమః కుచరశ్శయిష్యాయస్యోరుమత్రిమ క్రమణేషు" என்று வெளிப்பட்டு யாதொருவருடைய பெரியனவாகியமூன்றளவுகளுமியங்கும் போது, பீமః=பயங்கர முடையனவும், குசరః=குமார்க்கத்தில் சஞ்சாரஞ்செய்வனவுமாகிய, ம்ருகః = ஸிம்ஹவ்யாக்ராதிகள், நசயிஷ்டா = சயனித்துநித்திரை செய்யவில்லையோ, (அவருடைய) ఉభే శీర్షః= இரண்டு அடிகளையுமறிவோ மென்றுமுன்வாக்கியத்தில் சேரக்கடவது. இப்படிப்பொருளுரைப்பதை விட்டுச்சிவநிந்தையே தவமாய்க்கொண்டு அப்படிபாவியார்குனர்த்த பாழுரைபறந்தது! பறந்தது!! அக்குண்டக்சேயுதகரித்தபடியு மந்தவசனத்தில் சரிஷ்டா = ஹிமவத்பர்வதத்திலே முடங்கிக்கிடந்தா னென்றுபொருள்கூறுவதற்குப் பதமேயில்லை. அவரே கரிஷ்டாவென

ப்பாடமோதித் தமதுபாமரத்தை விளக்குமாறுயினராகையால். இதைநிவ்வளவில் விடுத்தாம்.

இதுநிற்க, ஹரதத்தாசாரிய சுவாமிகள் அனற்பதமாயிருந்தவிருப்புப்படியேறிச சிவபாரமயத்தைநாட்டி வெளிப்படுத்திய சுலோகங்களுக் குள்ளபடியே அந்த மகிமையுண்டெனி னிக்காலத்திலு மவைகளைக்கொண்டொருவன் சிவபாரம்யத்தை முற்படியே யேன்செய்யககூடாதென்று விசித்திரம்பேசினா. இவர் ஐயறிவோடுகூடிய மானிடராயினிப்படிபபிதற்ற மாட்டார். இவர்களிலோர் பேயாழ்வான்கிழியறுத்துக் கிழியுண்டகதையைமறந்தனர்போலும். அவ்வந்தராயன்பாட்டைபபாடியெந்தக்கொசவனுவது தங்கள்விஷ்ணுபாரம்யத்தையேனதாபித்துக் கொளளக்கூடாது? மல்லாந்துமிழ்ந்தான் மார்மேல விழுமென்றறியாத வம்மடைய சிரோமணியார்க்கதுசெய்தல் தமமால் கூடாதெனக்காட்டியபடியே யாமுஞ சொல்லகில்லேம். எம்மபெருநிதிகளாய்விளங்கும் ஹரதத்தரமுதவாக்குக் கன்றுமின்றுமேயன்றியென்றுமவ்வாற்றலுண்டெனவும், அவ்வண்ணமேயாவசிகம்வரப்பெறுங்கால் நடத்தவல்ல பெரியோரிக்காலத்திலுமுண்டெனவுந் துணிந்து கூறுவோமாக.

இவ்வுண்மையறியாதுமுழுதுங்குலைக்கத்தொடங்கியவஞ்ஞமலிப்பிறவியார் அத்துஷ்டவாசகத்தின் முகவுரையில்சிலவிசித்திரம்பகர்ந்ததையுமீண்டுவிசாரிப்பாம். தக்ஷிணாமூர்த்தியென்னுஞ்சிவனையும், சரஸ்வதியையும், வால்மீகர்முதலினோரையுந்தம்முடைய சக்திசாகரசீகரத்தாலேயிடுக்கிக்கொண்டமாஹாத்மியம்தங்கள்குதிரைமூஞ்சியாகிய ஹயக்ரீவரிட முண்டெனக் கொண்டாடி மகிழ்ந்தனர். சகலபிரமாணங்களுக்குள் சிரேஷ்டமங்களான சர்வோபநிஷத் பிரதிபாத்யராயுள்ள பரசிவப்பிரபுவின் மஹிமார்கவங்களை யறிந்தானந்திக்கும் பாக

కియశాలికలల్లాత పాషణ్డషణ్డాళ్ తుక్కితాళా య్ప్ పరమేశ్వరనిన్దయిట్ పడిన్దే యుழల్వర్! உழல் வர்!! ఈశావాస్యముతల్ ముక్తికోప నిషత్తిరుక నూర రెట్టుప నిషత్తుక్కళ్ వేదాన్తమెనప్పిరతయక్షీకిరిత్ తిరుకుమవట్రుళ్ ఈశావాస్య మెన్ను ముపనిషత్పిరత మత్తినుపక్కిరమత్తిల్ "ఈశావాస్యమిదꣳసర్వం యత్కించజగత్యాంజగత్" ఎన్ఱుమ్రొడక్కత్తిల్ ఈశశబ్ద మిరుప్పత్తా లుమ్, ముక్తికోప నిషత్తెనను ముపస్మహారోపనిషత్తిల్ "చతుర్విధాచయానుక్తి నదుపాసనయాభవేత్। కైవల్య ముక్తిరేకైవ పారమార్థికరూపిణీ" ఎన్నుమ్ శ్రీరామవచనత్తిల కైవల్యశబ్దం వెళిప్పట్టు "నసన్నాసచ్ఛివవత్కేవలః" ఎన్నుఞ్చుతియై యనుసరిత్తుక కేవలశబ్ద శివశబ్ద సామానాధికరణ్యం పెఱప్పడువతాలు ముపకరమోపస మ్హారంగళాల్ సకలోపనిషత్తుక్కుక్కుఞ్చివపరత్వ సిద్ధియేపిరాప్తమాయిట్రు. ఇవట్రిన్మత్తియిల శ్రీదక్షి ణామూర్త్తిపరమ్, హయగ్రీవపరముమాకప పెఱప్పట్ట వుపనిషత్తుక్కళిరణ్డిల్ దక్షిణామూర్తత్తియుపనిషత్తిల "సురగురుం ధ్యాయామ్యభీష్టాప్తయే" ఎన్నుమ్వచనత్తిల్ గురు శబ్దం పిరకాశిక్కిన్ఱతు. హయగ్రీవోప నిషత్తిన్నిమ త్యావసానంగళిల్ తేడితేడిప్ పార్త్తుక్కుగురుశబ్ద మావతు, అదన్పరియాయ శబ్దమావతు కాణక్కిడైత్త యిట్రు. ఇంగ్నమమాక, "గుకారోవంధకారస్స్యాత్ రుకారస్తేజ ఉచ్యతే" ఎన్ఱపడి రుకారమొழిన్త గుకారాన్ధకార స్వరూపియా కియ హయగ్రీవర్పాల్ తత్త్వజ్ఞానాన్ధకార త్వంసకరాకి య రుకారస్తేజస్వరూపరాకుమ్ శ్రీదక్షిణామూర్త్తిక్కువి యాప్పియఙ్కూరియతు అవైకతికపోత మెన్ఱే నిరో తఞ్చెయ్యప్పట్టతు.

ఇతునిన్క,పాశుపతమ్వామపాశుపతమ్,దక్షిణపాశుప తమ్ఎనవిరణ్డాకప్పిరిన్తతైయేయన్ఱో "ప్రమథగణాను చారిణః కేచన" ఎన్ఱతిల్కేశనశబ్దంకాట్టుకిన్ఱతు? అది

ல்தக்ஷிணபாசுபதமேயன்றோ சாம்பவாக்ரோசர்களாலா தரிகக்பட்டுச்சைவாசாரமென்னும் பிரசித்தியடைந்தி ருககின்றது? இதுகேவலம்வைதிகமென்னுமுண்மை பா சுபதோபநிஷத்தென்னு மோருபநிஷத்துக் காண்டலே காட்டும். பாசுபதத்துக்குண்டாயிருக்கிறபடியே பாஞ்ச ராத்திரதுக்கென்றோருபநிஷத்துமுண்டானதிலலையா க் வைதிகநிஷ்டமாகிய வப்பாஞ்சராத்திராவலம்பகர் வைதிகமாகிய பாசுபதத்தை மேல, "ப்ரமதகணாநுகாரிணாம் ச்ச" என்றசாமானிய வசனத்தால் நிந்தைகூறத்தொடங் கியது பதிவ்ரதாசிரோமணியைவியபிசாரியாயுள்ளவள் பழித்துமகிழ்வதுபோலவேயாம. இவ்வுண்மையறியாது பாசுபதம் வேதபாஹ்யம என்று கரகோஷஞசெய்வா ரதுகதியை யாமென்னென்று வியப்பது? உபநிஷத்து ககளின் மத்தியிற பெறபபட்ட பாசுபதம் அவைதிகமு ம், அங்கே பெறபபடாத பாஞ்சராத்திரம் வைதிகமுமா வது கலிகாலப்பண்பாம. இனி விவிலியநூலும வைதிக மாகவ்ருமபோலும, இபபடி வரம்பிகந்துவாய்வமபாடு மதபரம்பரையார்கரு எத்தனைகோடி நியாயங்காட்டி ஏறுமேறுது! ஏறுது!! இதனால, வைதிகராகியபாசுபதர் களிடததில பாஷண்டராயுள்ள பாஞ்சாரத்திரிகள தூற மறுதூஷணம நிஸ்புருஷறமென்க.

இன்னும், "தீக்ஷிதாஃபாஞ்சராத்ரேஷுபவத ப்ராஹ்மணாதனாம்" என்னுமகூதசம்ஹிதாவசனத்தால் பாஞ்சராத்திரிகளே கௌதமசாபத்துக்குள்ளானதைமறைத்துப் பாசுபதர்க் கேயநுவந்தது என்றுகுறைத்தமு நர்ய்களைப் பிரமாண மென்னுந்தடிகொண்டு மண்டைபிளக்கவடிப்பதேயுக்த ம்! யுக்தம்!! இப்படியேயின்னும், வேதத்திலில்லாத "தேவை தைத்யப்ரமுதநருசிநா" என்றும், "சைவாத்யாஃ சேஷாஃ" என்றுஞ் சில பொய்யுரைகளையும், வைதிகஹீனனாகிய வேதாந்த தேசிகன் என்னுந்திருட்டுப் பெயர்த்தாததனும், அவை

திக சிலனுகிய அந்தியஜாரியனுங் கூறியுள்ள சிலதப்பு வசனங்களையுமே யாதரவாய்க்கொண்டு பாசுபதபக்கஞ் செய்யவந்தவப்பஞ்சமச்சிரேஷ்ட ரொண்ணமெப்படி முன்னுக்குவரும்? மேலெடுத்துக்காட்டியவநாசாரிய ரொன்னுங் காட்டெருமைகள் வீழ்ந்துகலக்கிய சர்வஜலேபயுக்தமான பிரமாண மென்னுந் தடாகஜலத்தைத்தெளிவித்துவழங்கவந்த தேசிகரதநமாய் விளங்கும் அப்பதீக்ஷிதஸ்வாமிகளை யோர்தேவதாசியானவள் பரிபவப்படுத்தினளென்று அப்பேதைமகனார் பின்னும்புலம்பினர். இதைவிசாரிக்கையில், தீக்ஷிதஸ்வாமிகளால்பலமுறையபஜயம்பெற்றுப் பரிபவமெயதிவந்த தாத்தாசாரி யென்னுமவைதிகனானவன் தீக்ஷிதருபத்திரவத்தைப்பொறுக்கமாட்டாமல் விவரிடததினின்று மெப்படித் தப்பிததுக கொள்வதென்றோநாள் தன்னுடைய மனைவியோடு யோசிக்கையில், அம்மாது சிரோமணி புருஷனுக்குத்திருப்திகூறி அவரை நானஜெயித்து விடுகிறேன்பாருமென்று மறுதினந் தாத்தாசாரியோடு தானேராஜசபைக்கு வந்தனள். அந்தமஹாசபையில் தாத்தாசாரிக்குப்பக்கலினின்றுகொண் டுபசாரஞ்செய்பவள்போலபினயித்திருந்த வப்பார்ப்பனமாது அங்கேயெழுந்தருளி யிருந்த தீக்ஷிதமூர்த்திகளுக் கெதிராகத் திரும்பிக் கொண்டு நமைமேலிட்டுச் சொறிகின்ற வியாஜமூலத்தால் அவர் பார்க்கும்படித் தன்காலைத்துக்கித் தொடைமூலத்தையவருக்குக் காட்டினள். உடனேதீக்ஷிதர் தலைகுனிந்து நிமிர்ந்துபாராது விட்டனர். இப்படிக்குத்தலைகுனிய நேரிட்ட துண்மையே! இந்தப்பிரபாவமெல்லாந் தங்களாசாரியர், ஆசாரியஸ்திரீகள்மகிமைகளாகவே வெளிப்பட்டவதிசயமே! அதிசயம்!! இப்படியநந்தமுளவற்றை விரிப்பது அவசியமன்று.

இதுநிற்க, "ஆகாசாத்பதிதம்தோயம், யதாகச்சதிசாகரம், சர்வதேவநமஸ்காரம, கேசவம்பிரதிகச்சதி" என்னும்வசன

மொன்றெழுதி, இதை ஸ்மார்த்தர், மாத்துவர், வைஷ்ணவரென்னுந்திரிமதஸ்தருந் தினமும் அநுஷ்டானந் தத்தில் படிக்கின்றார்களெனவும், இதுகுறுநிலமன்னர் பகுதியெல்லாஞ் சக்கிரவர்த்தியினிடத்தே யடைவது போலச் சகலலோகேசுவரர்களுக்கும் பரமேசுவரராய் விளங்கும் விஷ்ணுவினிடத்தே சகலதேவர்களுமடைய வேண்டுமென்பதனைக் காட்டுமெனவும் "மோட்சமிச்சேத ஜநார்த்தநாத்" என்றபடியறிந்த சிவத்விஜர் சங்கியசித்து ஏகதண்டந் தாங்கினவராகிச் சதாநாராயண மந்திரத்தையேயுச்சரிப்பதன்றியில் தங்களையாரேனும் வந்தனாதிவழிபாடுகள் செய்யுங்கால் நாராயணஸ்மரணையே செய்கின்றார்களெனவும், இவ்வுண்மையையறிந்துமுலகில்விஷ்ணுபாரம்யபுத்திவராமல் சிலர்கெடுகின்றனரெனவு மவ்வழுமூஞ் சித்தாதர் அதிகமனஸ்தாபத்தையடைந்தனர். அப்பெருந்துரோகியார்க் கெப்பொழுதும் விசனப்பட வேண்டியது பூர்வாபரகர்ம பலமாகையால் யுக்தந்தான்.

மேல்சுலோகங்களில் "கேசவம்பிரதிகச்சதி" என்னுமுண்மையை யறிந்தே சத்துக்களாயுள்ள பேரியோர் சிவாராதனத்திற்பரத்துவபுத்திபண்ணிவருகின்றனர். எங்ஙனமெனின், சகலதேவர்களுக்கு மாத்மாக்கள் செய்கிற நமஸ்காரத்தைக் கேசவபதவாசியராகிய நாராயணர்வாங்கிச்சிவபெருமானிடஞ்சேர்ப்பிக்கின்றார் என்பதேயுண்மைக்கருத்தாம். "நாராயணாயேதிசமர்ப்பயாமி" என்றுநாராயணனுக்கே சகலத்தையுமர்ப்பணஞ் செய்கிறதும், "தத்பூருஷ்வமதர்பணம்" என்றுகண்ணன் கீதையில் சொன்னதும் சிவனிடத்தில் சேர்ப்பிக்கிறதற்காகவேதவிரவேறில்லை. ப்ரஹ்மார்பணம்ப்ரஹ்மவிஃ" என்னுங் கீர்வாக்கியத்தால் பிரம்மசப்தார்த்த ஸ்வரூபனாய் விளங்குஞ் சிவபெருமானையே கிரகிக்கவிடமுண்டானதால் தேவ

தாந்தர பாரம்யசித்தி யங்கேதலைகாட்டாதெனவறிக. இதை யுவமித்துரைக்குங்கால் குடிகள் கலெக்டரிடத் திற்கொடுக்குங் கந்தாய திரவியங்களைக் கவர்னர்வா ங்கி.மஹாராணியவர்களிடஞ்சேர்த்து விடுவதே யோசி க்கப்படுமாகையா லிவ்வுபமானதீர்க்கபரியாலோசனையி ல்நாராயணபரத்வம்நாடாது! நாடாது!! குடிகள்உயிரா களும், கலெக்டர்கள்தேவர்களும், கவர்னர்விஷ்ணுவும்,ம ஹாராணியார் சிவபெருமானுமாகவுவமைக்கூறியசாத்ரு சத்தால்(கேசவம்பிரதிச்சந்தி)என்பதற்குவிஷ்ணுவாதிக்கிய ஹாணியுண்டாயிற்றென்க. தேவாகளுக்குப்பிறர்செயய நமஸ்காரம் கேசவனை யடைகிறதென்பதைவிட்டுக்கேச வனுக்குத் தேவாகள செயகிற நமஸ்காரம் என்றுபொ ருள கொண்டுவமைகூறியவம்மடசிரோமணியார்புத்தி யின் தெளிவே! தெளிவு!! கேசவமூர்த்திகு அநந் யாதிபதித்வ மிலலாவிடினும சிவபக்தசிரோமணியாகை யால்பிரதக்ஷிணநமஸ்காராதி ஸ்தோத்திரங்களால் அவ ரையாராதித்தல சாவவைடுகஜனசம்மதமேயாம். இத னால, ஸ்மார்த்தசிலர் (கேசவம்பிரதிச்சந்தி) என்றுகூறுவத னாலுண்டாகிய சிவபரத்வஹானியாது? அவர் செய் யும் பஞ்சாயதனபூசையில் சிவலிங்கப் பெருமானுக்கு மத்தியஸ்தானத்தி லுசசபீடமிடடு ஏனையசாளிக்கிராம மூர்த்தி முதலிய நால்வர்களுஞ் சுற்றுமுலைகளி னீச்ச பீடங்களிட்டுஆராதிப்பதுமேயன்றோ சிவபரமத்தை க்காட்டும்? இன்னும், ஆவுடையாளான விஷ்ணுகீழும், லிங்கவடிவமான சிவபெருமான் மேலுமிருப்பதனாலும வ்வுண்மைவிளங்கும். சாளிக்கிராமமாத்திரம்விஷ்ணுஸ் வரூபமென்பதொழிய வாவுடையாளை யங்ஙனம்பாஞ்ச ராத்திரிகளொப்பார். ஒப்பாவிடில், மோகினியவதாரஞ் செய்தவிஷ்ணுவைப் பலாத்காரஞ்செய்துதுரத்திப்பிடி த்துக்கீழேதள்ளித் தர்ஷிக்கும்போது அந்தச் சிவதேஜ ஸை மோஹினிதாங்க மாட்டாமல் கெண்டமென்கிற

கூன்னப்பிரதேசத்தால் வாந்திசெய்ததினால் கெண்டகி யென்னுநதியுண்டாயிற்றெனவும், அதிலுள்ளசிலைகளே சாளிக்கிராமமும், ஆவுடையாளுமாகப்பிரத்யக்ஷீகரித்திருப்பதென்று நூல்களாலும், அநுபவத்தாலும் மேலோர்கூறுவதைப்பெப்படிபரிகரித்துக்கொளளக்கூடும்? சிவபெருமானை யூர்த்துவரேதசென்று வேதங்கள் கூறுமுண்மையையே யுன்றோ மோகினிபால்சிந்திய வவருடைய ரேதசு மேல்நோக்கி வாயின்வழியே வந்துவிட்டது? இப்படியனந்தபீராகாரத்தால சிவசம்பந்த நோக்கத்தால்விஷ்ணுவாராதனம் ஸ்மார்த்தாகளுக்குப் பரிக்ருஹீதமும், சிவபரத்துவபுத்தியுமுண்டா யிருப்பதறியாது அவர்விஷ்ணுவாராதனம் பண்ணுகிறாகளேயென்று ரோதனஞ்செய்யவநதது எப்படியேற்றம் பெறும்?

மேற்கூறிய நியாயமேயன்றி அன்யதாகிரகிப்பது கூடாது. எங்ஙனமெனின், "ஸ்ரீமஹாஜ்வரமுராயஸர்வதேவ யஜ்ஞராயநமஸ்தஷ்டிஷ்ட" என்னுஞ் சுருதியால்சர்வதேவதா நமஸ்காரம் ஸ்ரீசிவபெருமானையே சேரக்கடவதென்னு முண்மைவெளிப்பட்டமையா லிந்தச்சுருதிக்குவிருத்த பரமாக (கேசவம்பிரதிகச்சதி) என்னும் ஸ்மிருதியில் பொருள்கோடல் அசங்கதம். இந்தஸ்மிருதிவசனம் கேசவராயுள்ள நாராயணரிடத்தில் சர்வநமஸ்கார மடைவதென்று மாத்திரமே யுணர்த்திற்றன்றி நாராயணரவற்றைச்சிவனார்க்கர்ப்பணஞ்செய்கிறாரென்று விளக்கினதில்லையெனின், அந்தவாக்கியந்தானே சர்வதேவநமஸ்காரம் என்று பொதுவானே சொல்லிற்றன்றிச் சிவனாரை விளக்கிற்றன்றாகலின், பிரகிருதோபயுக்த சாதகமாகாதெனத் தள்ளப்படும். சர்வசப்தத்தாலே சிவனாருமடங்குவரொனின், சர்வசப்தத்தாலே கேசவருமதிலடங்கலால் வியபிசரிக்கப்பட்டொழியும். யாவருக்கும் எஜமானனென்கையில, யாவரும் என்பதிலெஜமானனை

க்கூட்டுவதுதவறெனின், இந்திரனைத் தேவர்களுக்கெல்லாந்தலைவனென்கையில் அவன் பிரமனுதியர்க்குந் தலைவனுத் லெங்ஙனம்? பிரமனைத் தேவர்களுக்கெல்லாந்தலைவனென்கையி லவன் விஷ்ணுமுதலினோர்க்குந் தலைவனுதலெங்ஙனம்? அப்படியேயன்றோ நாராயணரிடமுங் கொள்ளத்தக்கது? நாராயணரிடத்தில் சர்வதேவநமஸ்காரம் சேருமென்கையி லவருக்குக் கீழிட்டசர்வருமேன்றே பொருளுண்டாமன்றி அவர்க்குப் பரமாய்விளங்குஞ் சிவபெருமானு மவரி லடங்குவரொனப் பொருள் பயவாது. இவ்வுண்மை விசாரத்தாலும், மேற்காட்டிய சுருதிபோதகத்தாலும்சிவனுர்க்கேவிஷ்ணுவீறுன சர்வதேவதா நமஸ்காரம் அர்ப்பணமாதல் வைதிகநிஷ்டராயுள்ள சத்துக்கள் துணிபாம. இப்படிப் பொருள்கொண்டாலன்றி அபபேதைமகனுருதகரித்த ஸ்மிருதிவாகியம் பிரமாணமாகாது. மேலயாமுதகரித்த சுருதிக்கு விரோதப்பட்டுப்போமாதலால.

இதுநிற்க, சர்வகர்மாரமபங்களிலும் திரவியசுத்தி செய்யத்தொடங்குகையில புண்டரீகாக்ஷ ஸ்மரணை செய்யத்தக்கதென்றும் பாஞ்சராத்திரிகள் புலம்புவர். சாமவேதம பிரதமமந்திரத்தில் சர்வகர்மாரம்பங்களிலும் விரூபாட்சஸ்மரணையே செய்யத்தக்கதென்றுணர்த்தும். "తపశ్చతేజవచ్చతే" என்றுபக்திரமித்து "కర్తా ధిపతయేనమః" என்றதைமுற்றும்பிரசம்சித்து "తక్షరోపాక్షోసి" என்று கூறுகையாலும், இதற்குபப்பிரம்ஹணமாகச் சைவபுராணத்தில் "అపవిత్రంపవిత్రోవ సర్వావస్థాంగతోపివ। యస్స రేద్వారుపాక్షం సభాహ్యాభ్యంతరశ్శుచిః" என்று பெறப்பட்டதாலும் சர்வநர்மசமாராத்யனுக வாதியந்தங்களில் சிவபெருமானே சொல்லப்பட்ட வுண்மை வெளிப்பட்டதனுல் நித்தியகர்மமானசந்தி விஷ்ணுபாரம்யம் பெறுமென்றழவந்த நிகிருஷ்டோக்தி நிரஸ்தமாயிற்றென்க.

இதுநிற்க, சகலலோகேசுவரர்களுக்கும் பதியான பரமேசுவரரென்று விஷ்ணுவைச சொல்லிக்கொண்ட வப்பதிதர்பேராசை சாலப்பெரிது! பெரிது!! ஈசுவரன் கோயில், பெருமான்கோயில்என்றுலகில் சர்வத்ரசாதாரணமாய்ரூடியாகவழங்கிவரு மநுபவத்தாலும், "ஈஶ்வரஸர்வபூதானாம்" என்னுங்கீதாவசனத்தாலும், "மாயிநந்துமஹேஶ்வரம்" என்னுஞ்சுவேதாசுவதரமந்திரத்தாலும், மாயியான சிவபெருமானுக்கேபரமேசுவரத்வம்சித்தித்தபன்பால்விஷ்ணுவின்றலையி லதையேற்றப்பார்க்குதல் சக்கிரவர்த்தியினுடையமணிமுடியையேவலாளியொருவனுக்குச்சூட்டமுயலும் பண்பிலிழிந்தொழியும். "தமீஶ்வராணாம்பரமம் மஹேஶ்வரம் தம்தேவதானாம்பரமம்தைவதம் பதிம்பதீனாம்பரமம்புரஸ்தாத்விதாமதேவம்புவனேஶமீড்ய" என்னுஞ்சுவேதாசுவதரவசனத்தாலும் சர்வலோகேசுவராகளுக்கும் பரமேசுவரரின்னாரெனபது தெற்றென விளங்கும். இனி (மோட்சமிச்சேத்ஜநார்த்தனாத) எனறு காடடிய வசனம் சிவாதிக்யரத்நாவளி முதற்பாகத்தில (௧00) வது பக்கமுதல் (௧௧௬) பக்கம் வரையில் விசாரித்துககண்டிககப்பட்டிருத்தலேபோநும். இதுநிற்க, சிவத்விஜரா யுள்ளபேர் சந்யசித்து ஏகதண்டந் தாங்கித் திரிகின்றனரொனவும், அவரையாராவது வந்தனாதிகள் செய்தால்நாராயணஸ்மரணை செய்கின்றனரொனவுங்கூறியு விசித்திரத்தையோசிப்பாம். சிவத்விஜர்க்குச சந்யாசம் யாண்டும் விதிக்கப்படாத நுட்பந்தேராமல் அவர்க்கு ஏகதண்டத்தையு மேடுத்திசைதத வவ்வேழைமகனறிழிவுரையேற்றம் பெறுதலெங்ஙனம்? ஏகதண்டந்தாங்கு மெதிவரர் சாமான்யவிப்ரருட்சந்யசித்துக்கொண்ட ஏகாத்மவாதிகளே யாருமுண்மை யறியாமல் பதார்த்தத்திரயம்போதகராகளாகிய சிவத்விஜரொன்னும் ஆதிசைவர்பாலவ்வசன்யாசாரம்தை யாரோபிக்கவந்தவசட்டொயடியோ

சாம்ந்தரென்ன இதனால், சிவத்விஜர் நாராயணஸ்

மரணை செய்கின்றார் என்று நசையுரையுநாசம் பெற்றதென்க. ஆகவே, சாமானியவிப்பிரர்க்கே அது ஆசாரமாயிற்றென்பது வெளிப்படை. அவரோ மவவாசாரமற்றுவதென்னையெனின், மேல்(கேசவம்பிரதிகச்சதி) என்னும் வாக்கியத்துக்குரைத்த நியாயபரியாலோசனையிலதனாலும் பாதகமுண்டாகாதென்க. பிறர்செய்யுநமஸ்காரங்களை ஸ்மார்த்த எதிகள நாராயணருக்கு எப்படி வந்தனபூர்வகமாய் அர்ப்பணமபண்ணுகிறார்களோ அந்தப்படிக்கே நாராயணரு மவறறைவாங்கிவந்தனபூர்வகமாயச சிவனுரிடம் அர்ப்பணம்பண்ணி விடுவாரெனின், அதனால விஷ்ணுவுக்கு உதகாலம பிராப்தமாமாதெப்படி? விஷ்ணுவாராதனமுதலியன சைவருக்கும, ஸ்மார்த்தருக்கும பிரோதமாயினன்றோ நாராயணஸ்மரணையால விஷ்ணுவாதிகளை தலையெடுக்கும்? சிவபக்தாகரேசரென்னெண்ணப்படுவாராகிய நாராயணரை ஸ்மரித்தல சிவஸ்மரணை மாத்திரமாகவே கொள்ளப்படுமென்க. நாராயணஸ்மரணை செய்தபோதினுங் குற்றமில்லையெனபது மாத்திரமே யாயிண்டு விசாரிக்கவந்ததனறி அந்தநாராயணஸ்மரணையே எதிகளுக்குரித்தாகமுக்கியமந்திரமென வங்கீகரித்ததிலலை! அவர்க்குமுக்கியமந்திரம் பிரணவமாகிய தாரகமேயாகையால் மந்திரராஜமாகிய வபபிரணவமாகிய வுபாநிங்கியவழிக் கேவலஞ சடத்வமபெறுவப பிணமாத்திரமாகவே கழிக்கறபாலதாகு மவ்வசட்டமந்திரம் எப்படி யெதிவராக்குமுக்கியப் பிரதாயகமாகும்? எந்தப பத்ததிக்காரரும் எதிகளுககுநாராயணஸ்மரணை விதியாமையாலும், எதிகளுட சிலர் பிரணவததையே யுச்சரித்தலாலும், வேறு சிலர் சிவஸ்மரணையே செய்தலாலு மவை சிஷ்டாசாரமாத்திரமாகவே கிரகிககபபடு மென்க. இவ்வுண்மையை விசாரியாமல் சிவவேதியருக்கும், சாமானியவேதியருக்கும் வேற்றுமைதெரியாது குழறிவழிந்த வப்பட்

டைநாமப் பாஞ்சராத்திரியார் விஷ்ணு பாரம்யம் நாட்டவெழுந்தது சேற்றில்நட்டகம்பமாயிற்றென்க.

இங்ஙனநிற்க, பசவத்கீதையிலுள்ளதாகவொருவசனத்தையும், பாகவதத்திலுள்ளதாகவொருவசனத்தையுங்காட்டி யவ்விரண்டு வசனங்களாலும் விஷ்ணுவைகாட்டிலும் வேறுதேவதாராதனஞ் செய்தல் பிழையாமென்னும் பொருளை விளக்கி, அதனால் ருத்ரேந்திராதியாகளுடைய அந்தராந்தரங்களை யறிந்து விசிதமாகத் தெரிவிப்பது எப்படித் தூஷணமாகுமென்றுதாம்செய்யுஞ் சிவநிந்தைக்குப் பரிகாரந்தேடமுயன்றனர்.

இதனை முறையே பரிகரிப்பாம். கீதையில் "உத்தமः புருஷஸ்த்வன்யः பரமாத்மேத்யுதாஹृதः। யோலோகத்ரயமாவிश्य बिभर्त्यव्यय ईश्वरः" என்னும வசனத்தால் அழிவில்லாத ஈசுவரனென்று யாதொருவன்மூன்றுலோகத்தையும் பரிதுக்கொண்டிருக்கின்றானோ, அன்னியனும், உத்தமனுமாகிறவனே ஆத்மாவென்றுசொல்லப்பட்டான் என்றுபெறப்பட்டது. இதனால், புருஷனென்று சொல்லபபட்டவன் யாவனோ, அவனே யாச்சிரயிக்கத்தக்கவனென்றுகொண்டு என்னாலே சரணமடையப்பட்டிருக்கும்ந்த விசனையே நீயுஞ சரணமடையக்கடவாயென்றுஅர்ச்சுனனைக்குறித்துக் கண்ணன் சொல்லிய வாய்மைப்பாடுவெளிப்பட்டது. "ईश्वरः सर्वभूतानां हृद्देशेऽर्जुन तिष्ठति। भ्रामयन्सर्वभूतानि यंत्रारूढानि मायया। तमेव शरणं गच्छ सर्वभावेन भारत। तत्प्रसादात्परां शान्तिं स्थानं प्राप्स्यसि शाश्वतम्" என்னும் வசனத்தால் வாராய் அர்ஜுனா! மாயையாகிற யந்திரமென்னுஞ் சக்கரத்தை யடைந்திருக்கிற சகலபிராணிகளையுந் தன்னு மாயையால்சுழற்றிக்கொண்டிருப்பவராய்ச் சகல பிராணிகளுடைய ஹृதயத்தில்

யாவரிருக்கின்றனரோ, அவரையே சகலமான தன்மையாலுஞ் சரணமடையக் கடவாய். அந்த விசுவரனுடையவதுக்கிரகத்தினால் சர்வோத்தமமான சாந்தியையும், சாசுவிதமான ஸ்தானத்தையும் அடைவாயாக என்று கண்ணனருச்சுனனுக் குணர்த்தியதாக வெளிப்பட்டது. எந்தவிடத்திற் சேர்ந்தால் திரும்புகிறதில்லையோவென்றுகூறி மீண்டுஞ் சாசுவிதமான ஸ்தானத்தையடைகிறுயென்று ஏகப்பிரயோஜனத்தையே யுணர்த்துந்தன்மையாலும், உத்தமனுயுளனவனும், அன்னிய னுமென்று சமானாதிகரணங்களாயுள்ளவைகட்கோரிடத்தில்புருஷசப்தம் பிறந்துள்ள தன்மையாலும், ஈசுவரனென்னுஞ் சத்தங்களுக் கர்த்த மொன்றுகவே தோன்றுகையாலுமின்ன சுபாவசீலங்கண்டபாட்டிற் கேற்பக் கண்ணனுலவிளங்காநின்ற பொருட்டலைமை பரமசிவனிடந்தானேயெய்திற்றென்னும்படிக் கண்ணன்றனும்பிரபத்திபண்ணி வணங்கக் கடவதாகியபொருள்வர்ணிக்கப்பட்டது. இப்படி யொவ்வொரு வாக்கியமும் சிவபாரம்யத்தையே காட்டவெழு முண்மையை யறியாமல் கீதையில் விஷ்ணு பரத்வமுளதாகச சொப்பனங் கண்டமுதது சோம்பேறி வாதமாயிற்றென்க.

இனிச் (சிவபாரம்யப்பிரதரிசிநி) என்னும் பிரபந்தம் யாம் செய்துள்ளேமாகையால், அதனுள் (கங்காதாரணப்பிரக்யானம்) என்னும் பகுதியில் கிருஷ்ணபாகவதம் பிரமாணமா, அப்பிரமாணமா வென்பதைப் பரிஷ்கரித்திருக்கின்றனம். அதனால் ஷைபாகவதத்தாற்பெறப்படும் விஷ்ணு வாதிக்ய வசனங்களசாமஞ்சசமேயாம். அதவர் பிரமாணமெனக் கொண்டபோதும், அந்தப்பாகவதத்திற்றானே "ஏகரலேஷுபதேசம் [illegible] ஸ்ரீ [illegible] ஸ்ரீ [illegible] ஸ்ரீ [illegible] [illegible] [illegible]

யசிவபெருமான் உனது வேகத்தைத் தரிப்பாரொன்று கங்கையைப்பார்த்துப் பகீரதன் சொன்னதாகப் பெறப்பட்டது. "నతేగిరిత్రాణాః లోకపాలవరించతై కుంఠసురేంద్రగమ్యం। జ్యోతిః పరంయత్తరజస్తమశ్చసత్త్వంనయత్ప్రాప్తనిరస్తభేదం" என்னும் வசனத்தால்ஹேபரமசிவா! உனது ஜ்யோதியானது திக்பாலகாள், விஷ்ணு, இந்திரனிவர்களாலு மடையக்கூடாதது, சத்வரஜஸ்தமோகுணரகிதமாகவும், பேதரகிதமாகவு முள்ளது எனவும் பெறப்பட்டது. இவ்வசனத்தில் குணவிசேஷங்களாகிய வுபாதியோடு கூடிய பிரம்மவிஷ்ணுருத்ர பேதரகிதமென்பதும், இவர்களுடைய சமஷ்டிருபமான பரசிவாத்மகமென்பதும் நிரஸ்தபேதம்என்பதனாற் பெறப்பட்டது. "తమద్రవేగంనిదధ్యుస్సర్వేతే సన్నద్ధపర్వతసహ్యవీర్యాః। భీతాః ప్రజాః మదుద్రవురంగనేశ్వరాః అరక్షమాణాశ్శరణం సదాశివం" என்னும் வசனத்தால் திக்குகளிலும், ஆகாசங்களிலும் பூமியிலும் பரவிச்சகிக்கக்கூடாத வீரியத்தையுடைய காளகூடத்தினுக்கிரவேகத்தைக் கண்டு பயந்தவர்களாகி யொருவராலுங்காப்பாற்றப்படாதவர்களாயத் தங்கள் பிரபுகளுட்படப்பிரசைகள் பரமசிவனைச்சரணமாக வடைந்தார்கள்என்று பெறப்பட்டது.

இப்படிச் சிவபாரம்யங்களே பாகவதத்தானும் பெறப்படுகையா லதுகொண்டுஞ சிவாபகர்ஷத்துக்கிடந்தேடியது செல்லாது! செல்லாது!! மேல்கீதையினாலும், பாகவதத்தாலுங் கிருஷ்ணனும, அர்ஜுனனும் சிவாராதனம்பண்ணினார்க ளெனவும், காளகூடபக்ஷண சமயத்தில் பிரம்மவிஷ்ணுவாதி சமஸ்தமானபேருந் திரிமூர்த்தியுத்தீர்னராகிய சிவபெருமானையே சரணமாக வுடைந்தார்களெனவும் பெறப்பட்ட வுண்மைகண்டறியாது விஷ்ணுபக்தனவன் சிவனைத் தரிசித்தல் முதலிய சத்காரங்களைச் செய்யக்கூடாதென்றழவந்தரோதனமொழிந்தது! ஒழிந்தது!! சக்கிராங்கிதனாகியவிஷ்ணுபக்தன் பரிபாகஹீனத்தினால் சிவாராதனத்துக்கனர்

ஹத்வமுடையானென்ப தெமக்குமுடன்பாடே யாம். இவ்வுண்மை முடிவால் சிவபக்தாக்ரேசரா யுள்ளபோர் சிவேதரபரத்வ புத்திபண்ணி விஷ்ணுவாதிதேவதாந்தரத்தில் பக்திபண்ணுத லசப்யமென்று கூறும் பரத்மபுராணவசனத்தை யீண்டுப் பிரவசனிப்பாம் "ஸ்ரீமந்நரஸிம்ஹ மாஶ்ரித்ய சிவஶ்சோக்ரஜாயதே | சிவஶ்சோக்ரஸ்ஸதேஹோ நரகம்யாதி வாரணம்" என்னும் வசனத்தால் சிவன் கடவுளல்ல விஷ்ணுவேகடவுள் என்னும் பாபபுத்திமேற்கொண்டு யாவன் விஷ்ணுவைத் தரிசிப்பானோ, அவன் உடனே சிவத்துரோகியாய் விடுகிறான், சிவத்துரோகம் பெற்றவதனால சந்தேகமின்றி நரகானுபவசித்தி யவனுக்குப் பிராப்தமாம் என்று பெறப்பட்டது. இவ்வுண்மையே (கற்றைவார்சடையெம் மண்ணல் கண்ணுதல்பாதாணணி, மற்றுமோர்தெய்வகதனையுண்டெனநினைந்தெம்மாரு, கறநிலாதவகாக்கண்டாலம்மகாமஞ்சுமாரே) என நம்பெருஞ் செல்வமாய் விளங்கும் ஸ்ரீமந்மணிவாசகப் பிரபுருதிகள் கட்டளையிட்டருளியபடியுங் காண்க. இன்னும், "மாயனான் முகன் முதலிய தேவரைவணங்கி, மேயபூசனைசெய்பவர் நரகிடைவீழவார்" என்னுமான்றோர்வசனமுஞ் சான்றுதல்காண்க. இன்னும் விரிப்பிற்பெருகும். மேல்விசாரத்தாற் பெறப்பட்டனவெல்லாம் விஷ்ணுவைச் சிவனுக்குப் பரனாகவணங்குதல் கூடாதென்ப தொழிய வவனாயறவேவணங்காமல் கைவிடவேண்டுமென்பது கருத்தன்றாம். "நாராயணாதி நாமாநி விஸ்ருஜ்யநமஸ்கரோது" என்னும் வாக்கியத்தால் விசாரமின்றி நாராயணாதிநாமங்களை விட்டுவிட வேண்டியது என்று கொள்ளக்கிடைக்குமே யெனின், நாராயணாதி நாமங்களையே மோக்ஷப்பிரதாயகமெனக் கொள்ளுமவிவேகந் தோலைப்பித்தற்கே அது உபகாரமாகும். எனவே, மோக்ஷத்துக்குப்பரம்பராசாதனமெனக்கொண்டு சாட்சாத்தாக ஸ்ரீபஞ்சாக்ஷரத்தையே ஸ்தூலசூட்சுமங்களாகக் கொள்ளவேண்டுமென்பது வெளிப்படை. இத

னால், விஷ்ணுமூர்த்தியைச்சாம்பவராயுள்ளபேர்துவேஷியாரென்பது சித்தம்.

(பின்னையது)

இவ்வுண்மையை யறியாமல் "யஸ்துநாராயணம் த்வேஷ்டி" என்னும் வசனமொன்றெழுதிச சைவராயுள்ளபேர் விஷ்ணுவைத் துவேஷிப்பதாகவக்கார்த்தபராயர் கதறியழுதனர். "ருத்ரஃபசுகர்தா ருத்ரோயாகதேவஃ। ஸ்ரீஷ்ணுர்த்வர்யுஃபோக்தா ஜ்ஞாநிஃதேவதாயஜ்ஞபுக் மாநஸம்ப்ரஹ்ம்" என்னுஞ் சுருதியால் விஷ்ணுபக்வான யாகத்துககு அத்வர்யுவாதல பெறப்படுகையால் யாகசீலர்களாகிய வைதிகநிஷ்டராயுள்ளபேர்க்கு விஷ்ணுதுவேஷமுண்டாமென்பதெப்படி? இன்னும், பஸ்மாஜாபாலத்தில், "லிங்கரூபிணமாம் ஸம்பூஜ்யசிந்தயம் ஶிவோஹமஸ்மீத்யாஸீத்லிங்கதாயஜந்தி யஜ்வாநோ மாமேவ து வதந்தி வேதாஸ்தாங்காஸ்வோ-பநிஷதஸ்ஸேதிஹ ஸாநஹத்யோஸ்யஹ மேவஸ்வ-ஸ்மி யுஸவ-ம் ப்ரதிஷ்ஷிதம்-ஸதஃகாஶ்யாம் ப்ரயாதிரேஹமந்ஸ்வாஹம் பூஜ்யஸ்த்ரிபுண்ராத்ராதாநாஃ நாநாநாமா நாநாசிஹ்நாஃ நாநாரூபதராநாநாஸ்ஸ்ரீஷ்ணுதாரிணோ

னைத்தவிர வேறேயொரு பதார்த்தமுமில்லை, நானேசக லமுமாயிருக்கின்றேன், என்னிடத்திலேதானே சகல முமிருக்கின்றன. அதனால், காசியில் மரணவிச்சையு டையவரால் இரவும்பகலும் நானே பூசிக்கவுரியவனாகி ன்றேன், அவ்விடத்தில், பயங்கரமான முகங்களுள்ள கணங்கள் நாநாவிதமான நகங்களுள்ளனவும், நாநாவித மான சஸ்திரங்களைத்தாங்கினவும், நாநாவிதமானரூபங் களைத்தரித்தனவும், நாநாவிதமான வடையாளங்களைப் பெற்றனவுமாக விருக்கின்றன. அந்தக்கணங்கள் யாவும் விபூதி தாரணஞ் செய்துகொண்டிருப்பனவும், ருத்தி ராக்ஷமாலிகாபரணம் பூண்டனவும், அஞ்சலி கூப்பின வுமாகி நித்தியம் அபித்தியானஞ் செயதுகொண்டிருக் கின்றன. அவ்விடத்தில் பூர்வதிக்கில பிரம்ஹாவானவர் அஞ்சலி செய்துகொண்டு இரவும்பகலும் என்னையே யுபாசித்துக்கொண்டிருக்கின்றனர், தென்திக்கில் விஷ்ணுவானவர் சிரசில் அஞ்சலி கூப்பினவராகவே யுபாசி ததுக் கொண்டிருக்கின்றனர், மேற்றிசையில், இந்திரன் வணக்கத்துடனுபாசித்துக்கொண்டிருக்கின்றனன், வட திக்கில அக்கினி வடிவத்தையுடைய வுருத்திரர் என்னை யுபாசித்துக்கொண்டிருக்கின்றனர் என்று சிவனாருருவி சசெய்ததாகப் பெறப்பட்டதோடு தென்திசையில் முக் திஸ்தானமென்னு மோரிடத்தில் முக்திமண்டபமொன் றிருக்கின்றது, அந்தமஹாமண்டபத்தில் அநேக கணங் களை ஆயுதத்துடன் கூடினவாகிலோகபாலனஞ் செய்கி ன்றனவும், பாபிகளைப்பிடிக்கின்றனவுமாக விருக்கின்ற ன, அவ்விடத்தில், மஹரிஷிகளும், சாம்பவர்களும், பா சுபதர்களும், மஹாசைவர்களும் வேதபூஷணமானதை வபஞ்சாக்ஷரத்தையே தாரகமாகப் பிரணவத்துடன் ஜபஞ்செய்துகொண்டு சந்தோஷத்துடன் வசிக்கின்றார் கள் என்று வெளிப்பட்டது. இங்ஙனம் பெறப்பட்ட வுபநிஷத் பிரமாணங்களால் காசிஸ்தானவாசிகள் தன்

மையினிதுவெளிப்பட்டமையால் அந்தக்காசியில் தென் றிசையிலிருந்துகொண்டு சிரசில் அஞ்சலி செய்தவிற்ற விராதவராகி யிலிங்க பூசையால் சிவோபாசனஞ் செய்து கொண்டிருப்பவராகிய விஷ்ணு மூர்த்திக்கு விபூதி ருத்ராக்ஷதாரணத்வம், பாரமசாம்பவத்வம், பரம பாசுபதத்வம், சைவபஞ்சாக்ஷரஜபகர்த்திருத்வ முதலான சகலமுக்கியசைவதர்மங்களுஞ் சித்தித்திருப்பதால பாசுபதாக்கிரகண்யரான விஷ்ணுவை யொருபாசுபதனுந் தூஷிக்கமாட்டானல்லவா? இவ்வுண்மையறியாது ஊவர்கள் நாராயணனைத் துவேஷிக்கின்றார்க ளெனறு குறைத்தமும் வெறிகொண்ட நாயையென்ன செய்தாற்றான்றீரும்? மேலுண்மையால் வைதிகத்தாலுஞ் சைவதாலும் விஷ்ணு துவேஷத்துக் கிடங்கானாது பெற்றிக் கேற்ப வைதிகசைவங்களை யவலம்பித்தவராகிய சிவனடியாராயுள்ளபேர் வைதிக சிரோமணியும், சைவசூளாமணியுமாய் விளங்கும் விஷ்ணுபகவானிடத்தில் அத்தியந்தபிரீதியே பாராட்டிவருகின்றன ரென்பது அநுபவகிரஸ்தமாதலேனோ கண்ணுக்குப்புலப்படாமல் அறிவு கெட்டமாடுகளாகவப்பஞ்சராத்திரப்புல்லர் தலையிடறி வீழ்கின்றனர்? மேல்விசாரத்தால் "శివలింగస్యపూజా సర్వకర్మబహిష్కృతా" என்னுங் கழுதை வசன மொன்றைக்காட்டிச் சிவலிங்க பூசையை நிந்தித்த வக்கழுதைராயரே நாராயணத்வேஷியாயினரென்பது சித்தம்! சித்தம்!! நாராயணர்தன்மை மேலுபநிஷத்தின் படியாதலைவிரோதித்துஅவருடையஸ்வாநுஷ்டானமாகியவப் பரமசைவதர்மங்களை நிந்தித்தலைக் காட்டிலும் அந்நாராயணனைத்துவேஷிப்பதற்கு வேறுநிதரிசனங்கள் தேடவேண்டா. இதனால் நாராயணனைத்துவேஷிப்பதனால் பிராப்தமாவதாகிய "శివద్వేషాంత్యచేతనం" என்பது கோடைபிடியாய் அந்தஸ்வபசர் தலையிலே தானேவிழுந்ததென்க.

இந்தவிசாரத்தால் விஷ்ணு மூர்த்திக்குப் பாரத பாகவதராமாயணாதிகளாலுந் திர்மானிக்கப்படாத புண்டரமாலாதாரணமுந் திர்மானமாயிற்று. இவ்வுண்மையையறியாமல் யாம் வைஷ்ணவமணிகளென்னும் பட்டமாத்திரந்தாங்கி விபூதி ருதராட்சங்களைத் தூஷிப்பதே பெருந்தவமெனக்கொண்டு வெளிப்பட்டவப்பாஞ்சராத்திரபாலிசர் "చలుర్వేదధరోఽపి భూతిరుద్రాక్షవర్జితః। యథాచం డాలచాండాలస్తథాఽసౌ ద్విజఉచ్యతే" என்னும் வசனத்திற்போந்த (భూతిరుద్రాక్షవర్జితః) என்னும் பகுதிக்குப் பூதியும் ருத்ராக்ஷமுமே ஹேதுவாகச் சிஷ்டர்களாலே வர்ஜிக்கப்பட்டானென்றபடியெனப் பொருள் கொண்டனர். இந்தப் பொருளைத் தாபித்தற்கு விபூதி ருத்ராக்ஷங்களை அசேதனங்களாகையால அவற்றிற்கு வர்ஜனகர்த்திருத்வங் கூடாதென்பதே சாலுமெனவுஞ் சமாதானங் கூறினர். இப்படிப்பொருளைக்கொண்டு பஸ்மநிந்தை செய்யவந்த வப்பள்ளச்சிரோஷ்டர் "సర్వసత్కర్మవర్జితః" என்னும் வசனத்துக்கு என்னபொருள்விரிப்பரோ வறியேம். சத்கர்மங்களிடத்தும் வாஜனகர்த்திருத்வம் சித்தியாமையால் சத்கர்மங்களைத் தரித்தமையே ஹேதுவாக வொருவன் வர்ஜிக்கப்பட்டானென்றே பொருள்கொள்ளவேண்டிவரும். சர்வசத்கர்மங்களையுஞ் செய்தவனைச் சிஷ்டர்கள் தியாகஞ்செய்வார்களாகில் (యాన్యస్మాకంచ శిష్టానామన్యోపాస్యాని) என்னுஞ் கருதியால் எவை நமக்கு நல்லநடத்தைகளோ அவை யுன்னு லுபாசிக்கத்தக்கன வென்று பெறப்பட்டவுண்மையும் பொய்ப்பட்டொழியும். இப்படி விபரீதத்தாற் புலம்பி யழியுஞ் சர்மம்சீ! சீ!! கொடிது கொடிது. இந்தத்துர்வாதியால்பெய்யப்பட்டதைக் கண்டிக்க நாமேர்ப்பட்டது அநுசிதமாக விருந்தபோதிலும் உபநிஷத்தீவிசிட்டமான சிவபாரம்யம் வெளிப்பட்டு லாதுக்கள் சந்துஷ்டாளாகிப் பிழைக்க ஹேதுவுண்டாகையா லிந்தநம்முடைய பிரவி

ருத்தி யுரிதந்தான். வேதாந்தமென்னும் பெயரினவாய் நூற்றெட் டுபநிஷத்துக்கள் பிரகாசிக்கின்றன வற்றுள் விபூதிதாரணத்துக்கு ஆதாரமான பிருஹத்ஜாபாலம், பஸ்மஜாபாலம், காலாக்னிருத்ரம் என்னும் மூன்றுபநிஷத்துக்களிருக்கின்றன. கோபீசந்தனபுண்டரதாரணத்துக்கு ஆதாரமான வாசுதேவோபநிஷத்தொன்றிருக்கின்றது. இன்னும் ஸ்ரீருத்ராக்ஷதாரணத்துக்கு ஆதாரமான ருத்ராக்ஷோபநிஷத்தும், பத்மாக்ஷமாலாதாரணத்துக்காதாரமான அக்ஷமாலிகோபநிஷத்து மிருக்கின்றன. இவைகளேயன்றி சித்ரோர்த்வபுண்டரதாரணம், துளசிகாஷ்டதாரணம், மஞ்சணூலதாரணமித்யாதிகட்குப் பிரமாணமாக வோருபநிஷதவாகியசகலமாவது காணவில்லை. இவ்வமங்கலதாரணங்களுக்கு யாரும் வைதிகரெனப் பிதற்றித்திரியு மெந்தப்பாஞ்சராத்திரியாவது ஒருபநிஷத் பிரமாணத்தைமாத்திரங் காண்பிப்பானாகி லன்றோ வவனுசாரத்தை வைதிகராயுள்ளபேரங்கிகரிப்பர்? மஹரிஷிகளிட்ட சாபத்தால் வெள்ளைமணயோனி புண்டரத்தை யவ்வவைதிகபுமானகள் பாஞ்சராத்திரப்படியே தரித்துக்கொண்டு கொண்டானடிபபதில் யாதொருகோட்டமு மெமகின்றென்க. அவர்கள் தலையெழுத்தெல்லா மிவ்வளவின் முடிந்திருப்பதறியாது தலைகால்தெரியாமல் வைதிகமாயுள்ள பஸ்மருத்தராக்ஷங்களைத் தூஷித்துத் திரியுமவர் சாத்ருசமே! சாத்ருசம்!! இதுகலிமஹிமையென வறிக.

மேல்யாமுதசரித்த பஸ்மஜாபாலத்தில்சாம்பவர்கள், பாசுபதர்கள், மஹாசைவர்கள் என்னும் பாகுபாடாற் பிரித்தோதப்பெற்ற சிவாகமநிஷ்டமான சைவபேதங்களில் சாம்பவீர்கள் என்பது சிவபக்தஜனசமஷ்டிவாசகமும், பாசுபதர்கள் என்பது பசுபதிமுகோற்பவராகுந்தன்மையுண்மையால் ஆதிசைவரையே காட்

டும் வியஷ்டிவாசகமும், மஹாசைவர் என்பது பிரம்ஹ தேவர் முகோத்பவராகுந் தன்மையுண்மையால் சாமா மானியத்விஜரையே காட்டும்வியஷ்டிவாசகமு மாகச் சத்துக்கள் பொருள்விரிப்பர். இப்படியுபநிஷத்துக்கள் பலவற்றுனும புகழ்ந்தோதப்பெற்ற ஜகதாசாரியமூர்த் திகளாகிய ஆதிசைவரையு மவ்வந்திமஸ்ரோஷ்டர் தாறு மாறுய்ப் பிதற்றியிருக்கின்றனர். இதற்குப் பரிஹாரம பாம் வெளியிட்டிருக்கும ஆதிசைவப் பிரபாவத்தாலு ட், இனிவெளியிடப்போகுஞ சிவத்விஜோத்கர்ஷ தீபி கையாலும் விவேகிகள் தேடிகொள்வார்களாகையா லிங்கே விஸ்தரியாதுவிட்டனம.

இங்ஙனநிற்க, சிவாதிகயரத்நாவளி முதற்பாகத் தில் (ஸத்யரசாமஜஸ்யீ) என்றுஞ நத்திரததால் வியா சபகவான் சிவாகமங்களாக கணடித்தார் என்று பாஞ்ச ராத்திரப் பறையா பிரலாபித்துவரும் ரோதனப்பாட் டை ஸ்ரீசுந்தரசிவாசாரிய மூர்த்திகள் கண்டநுண்ட மாய்ச சேதித்தமானக்கேட்டால மனம்பொங்கி யப் பேதைமக்கள் கும்புகுடியழுது பேரிழவுகொடுத்த பெ ருமித்ததைச் சறறேபரியாலோசிப்பாம்.

"முன்னையது" என்னும் போலிசசுவடியில்வேதத் தினும் புகழப்பெற்ற வியாசர் "ஸத்யரசாமஜஸ்யீ" என் றுகூறினுளெனவும், அதற்குப பாஷ்யஞ்செய்த சங்கரா சாரியா பசுபதி சம்பந்தமாகிய பாசபதம் அநாதாணிய மெனக் கண்டித்தாளெனவுங் கூறியிருத்தலை ஸ்ரீ சுந்தர சிவாசாரிய சுவாமிகள் தமது ரத்நாவளியில் தக்க சமா தானங்களால் பரிகரித்து விட்டனர். எங்ஙனமெனின், வியாச சூத்திரத்துக்கு ஏற்றத்தை நாட்டவேண்டியே யச்சூத்திரகர்த்தாவாகியவியாசனிரவேதம்புகழ்கின்றது என்று இப்போலிப்பிரபந்த கர்த்தர் எடுத்துக்காட்டினு

ராகையால் ஸூத்திரகர்த்தாவாகிய வியாசரை வேதம் புகழ்கின்றபடியே பாஷ்யகர்த்தாவாகிய சங்கராசாரியரைவேதம் புகழாமையால் வியாசருக்குண்டாகிய வேற்றம் சங்கராசாரியருக்குண்டாகாதெனவும், வேதம் சங்கராசாரியரைச் சொல்லாவிடினும் வேதத்தினாற்புகழப் பெற்ற வியாசவசனத்துக்குப் பாஷ்யமெழுதினாராகையால் அவர்வசனமுமங்கீகரிக்கத்தக்கதெனின், சங்கராசாரியைப்போலவே அந்தவியாசவசனத்துக்கு வேறுசிலருந்தனித்தனி அசசங்கராசாரியர்பாஷ்யத்தைச்சிந்துசிந்தாய்சசேதித்து வேறு வேறுஅபிப்பிராயங்களைநாட்டிப் பாஷ்யங்கள் செயதிருக்கின்றாராகையால் சங்கராசாரியர்வசனத்துக்கேயேற்றங்கூறுவதுகூடாதெனவும், அப்படிப் பாஷ்யகாத்தர்களாய் வெளிபபட்ட வாசாரியர்களில் இராமாநுஜன் என்னும் அநதியஜாரிய னொருவனுகையா லவனுரையை யங்கீகரித்தநுடடிப்ப தொழிந்து சங்கராசாரி யநுடடானத்தைத் தழுவற்பாலரல்லாதபாஞ்சராத்திரிகள் வீணே சங்கராசாரியர் சொன்னார் சொன்னாரென்று மனந்துடிப்பது அசங்கதமெனவும், சங்கராசாரி யுரையை யங்கீகரிதது அததால்சிவாகமதூஷணஞ் செய்யவந்த படியே அசசங்கராசாரியர் தூஷித்துரைத்த வைஷ்ணவசித்தாந்தத்தையு மகற்றுமலேறபது கூடாதெனவும் பலநிபாயங்களால் பிரவசனஞ் செய்தபடியாம். இதைப்பரிகரித்துக் கொள்ளவகைகெட்ட வக்குருட்டுதததாதர் ஸ்ரீகண்டசிவாசாரியரை யெந்தவேதம் புகழாநின்றதென்னுங் கடாநிகழ்த்தினர். இது மூடாக்ரோசரின் முதற்றும்பூலம் வாங்கத்தக்க வவர்குஞ்சுகளாகிய மூழுமடையருக்கே பிரயோஜனமாம். வியாசர் பொய்சொல்லாதவராக வேதம்புகழ்கின்றதென வவரேயுரைத்தபடியா லன்றோ சங்கராசாரியைப் பொய்சொல்லாதவரென வேதம் புகழ்கின்றதாவென்னும் வினாநிகழ்ந்தது? வேதம்புகழ்ந்ததா லுயர்

வும், புகழாமையாற் றாழ்வுமுண்டெனக் கருதி வியாச ருக்கேற்றம் பகரவந்தவர் தாமேயாக, அதைவிட்டு ஸ்ரீ கண்டரை வேதம்புகழ்ந்ததா வென்று வினவியதென்ன பேதமை? இப்படியேஅந்தியஜனாகியஇராமாநுஜனையெ ந்தவேதம்புகழ்ந்தது என்னு மாசங்கையே னுண்டாகா து? வேதம் புகழ்ந்தமைகொண்டே யுயர்வும், புகழா மைகொண்டே தாழ்வுங்கூறுவது எமமிகொள்கையன் றும். வேதம்புகழவதனு லுயர்வின்மையென்பது மெம ககுடன்பாடன்றும். எங்ஙனமெனின், 'வேதத்திற் புகழ ப்பெற்றவனாகிய பிதாமகன் விஷ்ணுவோடு பொயபேசி பபூசையுங்கோயிலும் போகக்கொண்டபடியும், வே தத்திற புகழபபெற்றவனாகிய தக்ஷன் சிவனை விரோதி த்துத் தலையிழந்து பின்னராடடின் றலையை யடைந்த படியும், வேதத்திற் புகழபபெறறவராகிய விஷ்ணுவா னவர் பொய்பேசி உமாதேவியாரால மலைப்பாமபாகச சபிகக்பட்டபடியுமே போதுமான நிதரிசனமாம். இ ன்னும் வேதத்தினாற் புகழபபெறறவராகிய சிவபெரு மான் நித்தபுததமுக்த சத்திய பரமாநந்தஸ்வரூப லட சண விசிட்டராகும்படியு மமைவுடைததாம். இவ்விர ண்டுபடியாலும் மேலுண்மையை விவேகிகள் முறையே தெளிந்திடுவரொன்க.

இதுநிற்க, அந்தியஜபாஷ்யத்தை ஸ்ரீபாஷ்யமெ னக்கொண்டாடிய திரியு மவ்வந்திமன் குருசாவார் ஸ்ரீ பாஷ்யகாரராகும் நமது ஸ்ரீகண்டமூர்த்திகள் விஷயத் தில் மலையைப்பார்த்து நாயகுலைக்கிறதுபோல் அந்தமூ ர்த்திகள் பூர்வீகசைவஸித்தாந்தத்தைக் கெடுத்துவிட் டாரென்ற தேத்யாதி சிலதப்புரைகளை வீணேபிதற்றி னர். அப்படிச் செய்தவன் தம்மவந்தியஜனேயாம். எங் ஙனமெனின், பூர்வீகவைஷ்ணவராயுள்ள சடகோபன் பேயான், பொய்கையான், பூதத்தானென்பவராலாசரிக்

கப்படாத வெள்ளைமண் யோனிபுண்டரதாரணம், சக கிராங்கன முதலிய துராசாரங்களை யவலம்பித்து வை திகப்பிரஷ்டனாய்த் திரிந்த சீர்ப்பாடு பிரகிருதாசாரத் தாலும், பூர்வீகபத்ததிகளாலும் விவேகிகள்கண்டுணரா மற்போகார். அவன்றம்பி யங்குதனென்றபடி மொட் டைநாமம், காவிழுத்தநாமம் போட்டுக் கட்சிக்கார ராக வெளிப்பட்ட பார்ப்பாரக் கறுப்பன், பனமரக கரியனிவர்களுமே யன்றோ தங்கள் பூர்வாசாரியர்க ளுக்குப் பங்கநாமஞ் சாத்திப் பிரதிஷ்டை பெற்றவர்க ள? சைவத்தில் உடசமயம, உடபுறசசமய மென்னும் பகுதிக ளதிகாரபேதத்தாலுண்டாகிய பேதவாதம், அ பேதவாதம, ஐககியவாதம, ஸமவாதம, ஸங்கிராந்தவா தம, நிமித்தகாரண பரிணாமவாதம், பாஷாணமோக்ஷ வாத மித்தியாதிஸித்தாந்தங்க ளுண்டாயிருத்தல் ஸித் தம். இததனையும் வேதசிவாகமங்களிற் பெறப்பட்டன வேயாம். இவறறு ளொன்றே ஸ்ரீகண்டாசாரியர் சித்தா ந்தமாகையால அவ்வாசாரியமூர்த்திகள் ஸ்வசித்தாந்த ஸ்தாபனார்த்தம் அன்னியஸித்தாந்த நிரோதஞ் செய்த லமை வுடைத்தாம். அப்படியே யொவ்வொரு ஸித்தா ந்தகாத்தரும ஸ்மவதஸ்தாபனமும, பரமதநிரஸ்தமுஞ் செயது வருதலும் சங்கததமேயாம். இப்படி யொன்றை யொன்று நிரோதித்து விவகாரஞ்செயயும் பெற்றியுண் டாயினு மெல்லாஞ்சைவமேயாகி யொன்றி லொன்று சாதகசாத்யங்களாக முடியுமுண்மையால் அவ்வவ்வா சாரியர்கள் பிரவர்த்தக மத்தனையு முபகாரமேயாம். இ தனால், ஸ்ரீகண்டாசாரியமூர்த்திகள் பூர்வீக சைவஸித் தாந்தத்தைக் கெடுத்தாரென்னுங் கேடுரையே கெட்ட தென்க. மேல்வியஸ்தையை யுவமித்துரைக்குங்கால் ச ரியை கிரியை யோகஞானங்களென்னுஞ் சிவோபாசனா பேதங்களி லவ்வவ்வாசார வநுட்டாநங்களே பரமசி ரேஷ்டத்வமுடையன வெனத் தனித்தனி வியந்துரைக்

கும் பெற்றியுண்டாயினமையே போதுமான நிதரிசன மாம். இவ்வுண்மையை ஞானமொன்றினையே பிராதா ன்யமாக நாட்டவெழுந்த ஒழிவிலொடுக்க மென்னும் ஸத்கிரந்தவாயிலாய்க் கண்டுணர்க. இன்ன சூக்குமவி சாரஞ்செய்யு மறிவில்லாத கொடுமையேயன்றோ செக குஞ சிவலிங்கமுமென வறியாது நக்குநாயபோல மே லோர் விஷயத்திலெல்லாந தலையிடுகொண்டு மொ த்துண்டுபோக வருவது? சைவம் சிவசம்பந்தமென்னு முண்மையா லசசிவசம்பந்தம் வேதமார்க்கத்தாலும், சிவாகமமார்க்கத்தாலும, ஸ்மிருதி மார்ககத்தாலும், பு ராணமார்க்கத்தாலுஞ்சித்திப்பதாக வோபபடுகின்றது. இந்த மார்ககாநுசாரிகளாய்ப பிரவாத்திப்பவர் தனித தனித் தாம்பற்றிநிற்கும பிரமாணோதாரங்களில் சம்பந தித்காமலே நிற்பவரும, தாம்பறறிநிற்கும் பிரமாணத தோடு இதரபிரமாணங்களையுந் தம்ம ஸ்வப்பிரமாணத தி லவிரோதமாகத தமகுததோன்றுமளவி லங்கீகரித் ததுட்டிப்பவருமாகவே யிருககுமுண்மையால, ஸ்ரீகண் டாசாரியர் பிரவர்ததனமு மவறறுளொனறுகவே முடி யும். எல்லாம் சிவோபாசனுமார்க்கங்களாகையா லெவ் வகைப்பட்ட வாசாரியர்களுந்தும் சிவபாரம்யததிலவே றுபட்டதின்றும. சிவாதிகயததைக் கலைதது விஷ்ணுவா திக்யத்தை நிலைகக்பண்ண வந்த வத்வடிராயர் அதை விட்டு வீண்விவகாரத்திலிலைந்தழிவது அசங்கதம! அசங கதம்!!

இதுநிற்க, ஸ்ரீகண்டாசாரியர் சூத்திரர்க்கு மாத் ருயோனி ஜன்மமொழிய வேறுஜன்மங்கிடையாமையா லே ஒருவகைப்பட்ட சமஸ்காரங்களுக்கு முரியரல்ல ரெனவும், சூத்திரர்கள் பிரம்ஹவித்தைக்கு அதிகாரிக ளல்லரெனவுங் கூறிச்சிவாகமஸித்தாந்தத்தைக் கெடுத் துவிட்டாரென்றுகண்ணீர்விடுத்தவக்கபோதிராயர் மல

த்தைமோசிப்பாம். ஸ்ரீபாஷ்யகாரர் மேற்சொன்னதெல்லாம் சூத்திரா வேதாதிகாரிகளன்றுதையா லவர்களு வேதோக்தமான ஸம்ஸ்காரஞ செய்யக்கூடாமையாலேயவர்களு த்விஜத்வமுண்டாகாதெனவும், அதனால் அவர் வைதிககர்மங்களுக்கும், வேதாந்தமாயுள்ள பிரம்மவித்யாபயாசத்துகரும அதிகாரிகளலலரென்றுங்கூறியது சிலகரும்பிரதிபனனமேயாம். சிவாகமங்களிலவர்களு ஆசாரங்களுமவிதியாபாரங்கசிரேஷ்டதவமுஞசொல்லியிருத்தலேபோதும். சிவாகமத்திலசூத்திரனுகருவேதோக்தமாகவுபநயனாதிகர்மங்களசெயயலாமென்றுவதுசூத்திரனவேதாதயயனாதிகள்செயயவதிகாரியெனறுவதுசுருதியிருந்து அகறது மறுக ஸ்ரீகண்டாசாரியா நிவிரதிகூறியிருபபரென மாத்திரமே அவர் சிவாகம விரோதமாகிய சைவத்துகு ஹானிதேடினாரெனபது சேரும் ஸ்ரீகண்டாசாரியா கூறியபடியே சிவாகமத்திலுஞ சூத்திரனுகு வேதோக்தமான கர்மங்கள் கூடாவென்று சொலலுவதறியாமல ஸ்ரீகண்டமூர்த்திகளைத் தூஷிககவந்த வசசிரிபபாருண்ட கழுகை வாசகம் செருப்படியுண்டு போயிற்றெனக.

இனிச (சிவாதிகயாத்நாவளி) முதற பாகத்தில "ஸ்ருத்ரஸ்ய ஜ்ஞானவிஷயே வேதஸ்ப்ரக்ஷேபஃ" என்னுஞ சூத்ரங்களை யெடுத்தாளுகையில இரண்டாவது சூத்திரத்திலடசரம் பிசகினது அசகுப்பிழையெனவறியாது அதைக்கிரந்தகர்த்தாவினிடத்தி லாரோபித்துச சகதோஷித்தவப்பாஞசராத்திர பாலிசசை அல்பசந்தோஷி யெனறே தீர்மானித்தனம். இந்தவசனங்களால் சங்கராசாரியர் வைஷ்ணவமதத்தைக் கண்டித்தாரென்று ஸ்ரீசுந்தரசிவாசாரியமூர்த்திகள் காட்டிய வுண்மையான் மனம் புழுங்கியே யன்றோ வவர்மேல் தோஷாரோபணஞ் செய்யவந்தது? சங்கராசாரியர் ஜீவர்களுக்குற்பத்திகூறுவ

தாகக் கொண்டு வைஷ்ணவமதத்தைக் கண்டிக்கவில்லை யெனவும், ஜீவர்களுக்குறபத்தி கூறுவதாக மேலெழுத் தோன்றும் பாஞ்சராத்திர வாக்கியங்களையே மறுத்து, எதார்த்தத்தி லுறபத்திகிடையாதென்று அவரோ ஸ்தா பனம் பண்ணிவிட்டாரெனவும் வீணே மனப்பால் குடி. து மடிந்தார். சங்கரபாஷ்யத்தில், "య స్సర్వాణి భూతాని నారాయణాదేవ వ్యక్తా ప్రసిద్ధాః పరమాత్మా సర్వజ్ఞ సర్వశక్తిమాన్ నాన్యోఽస్తీత్యాద్యా హ్యవక్తవ్యతత్వన్నిరాక్రియతే" என்கிற வாக்கியங்களைப் பார்த்து நாராயணசப்தத்தால நம்முடைய பாஞ்சராத்திரம் மதத்தைச் சங்கராசாரிய ருத்தாரணம் பண்ணிவிட்டா ரென்றெண்ணி ஸ்ரீசங்கராசாரியரென்று ஸ்ரீசப்தத்தை யுமவருக்குக் கொடுத்து சந்தோஷித்த வப்பாமரசிரேஷ்டர் மௌடடியத்தை யென்னென்று சொல்வோம்? அவ்விடத்திலுள்ள வவருடைய வசனங்கள் முழுமையும் பார்வையிடாமல ஒலுகிறவனுக்கச்சுவானதுக்கு அவாவாக்கியங்களாகிறபிண்டதத்தைப்போடுகிறோம். "ప్రతిషేధాచ్చ" என்று மவ்வதிகரண வுபஸம்ஹார சூத்திரபாஷ்யத்தில் சங்கராசாரியர் "నేమే ప్రతిషేధశ్చేత్ప వచనత్వే దేషుపరంత్వేయః। అథ్యాణ్డిలఇదం శాస్త్రమధీతమిత్యాది నేదం దర్శనాత్। తస్మాత్సంగతైవాఽల్పనా" என்று சொல்லியிருப்பதில பாஞ்சராத்திரிக்கு வேதநிந்தகத்வம் பிராப்தமாவதறியாது தம்மதத்தையவாசிலாகித்ததாகமகிழ்ந்துரையாநிற்பது பிராந்தியேயாம். பின்னுமவ்விடத்திலேதானே "నచపాఞ్చరాత్రసిద్ధాన్తభిన్నాసు వేదాదిష్వేకస్మిన్ సర్వేషువాజ్ఞానైశ్వర్యాదితారతమ్యకృతఃకశ్చిద్విశేషోఽభ్యుపగమ్యతే" என்னும் வசனங்களால் பாஞ்சராதநிர சித்தாந்தமென் றறுதியிட்டு வெளிப்படையாகத் தூஷிக்கின்றாராக வவற்றையறியாமல் அவர் தமது ஸித்தாந்தத்தையே தாபித்தாரெனக் கூறி மகிழ்வது என்னபேதமை? சங்கரபாஷ்யத்தில்நாராயணசப்தமாவது, மஹேசுவரசப்தமாவது, பரப்பிர

ம்ஹசப்தமாவது, பரமாத்ம சப்தமாவது வருந்தோறும் அவையோர்த்தத்தையும்பயவாமல் நரியூளையிடுவது போலாமேயன்றி வேறில்லையென்று சகலபாஞ்சராத்திரர்களும், ஏனையசமயிகளுந் தீர்மானித்திருக்கின்றார்கள். இங்ஙனமாக, அதில் நாராயணசப்தமவதுவிட்டதேயென்று பெருமைகொண்டாடவந்தது பெரியவெருமை பேய்பிறந்தது போலாமென்க.

இதுநிற்க, வாசுதேவரிடத்திலின்றுஞ் சிவாபிமானியாயமகொண்டு ஜீவனென்று பேரெற்ற ஸங்கர்ஷணனிடமுதத்துக்கு உற்பத்தி சொல்லப்பெறாமல் சாகரசாரியர் வைஷ்ணவத்தைக் கண்டிருப்பாரென்பதை யாமெய்யென்று நம்புவார்களென் றறிவுந்த வமடிகேடர் தன்னமையாயினிமாறுவாம். "ப்ரஸீதஸ்ய ஸ்வாமிநஸ்ஸுதீக்ஷ்ணஸ்ய ஸாஸ்ருஜத் ஸ்வயம் ஸ்வாமிநா ஸ்ருஜ்யமாநஸ்ய ஸ்ருஷ்டிர்ஜ்ஞாநாதிகா ஸ்மிருதா" என்னும் வசனத்தால் பாஞ்சராத்திர விதிப்படி ஸங்கர்ஷணனை ஜீவனாகவோர்பாகமாக்கி ஸ்ருஷ்டிக்கிறதாகவென்னாவிகண்டிருந்தாரிறே தனிச்சிவனென்னும் பேரெற்ற ஸங்கர்ஷணனென்று சங்கராசாரியனுடைய அபிப்ராயமில்லையென்று ஸ்பஷ்டமாயிற்று. மேல்விசாரத்தால் ஜீவோற்பத்தியை மறுக்கத்தே முடிவுபெற்றதாகவினிக்கனைப பரிகரித்துக் கொள்ள வகையறியாத வாயபசுபிராயர் சைவசித்தாந்தத்து முற்பத்திகூறு முண்மையாலானமுமதுஷணமேறுமென்பதற் கேற பசசைவாகமங்களில் ஈசுவரதத்வம், பிரகிருதித்வம், புருஷதத்வம், காலதத்வ மித்யாதிகளுக்குறபத்தி கூறுவதென்னையென்றுசங்கித்தனர். இன்னும், பரமசிவனிடத்திலின்றுஞ் சாந்திபிரதிசிவன், சதாசிவன், ஈசுவரன், வித்யாசிவனிவாகளுக் குற்பத்திகூறியதும் பழுதாமென்றனர். அன்றியும், மஹதஹங்காரங்களும், பஞ்சதன்மாத்திரைகளுமாகிய வேழுத்தவங்களுக்கும் மூலமான ஸத்வரஜஸ்மோமய குணத்துவத்துக்குங்கா

ணமான பிரதானமென்று சொல்லப்பட்ட பிரகிருதி தத்வத்துக்குக்கலாதத்துவ மென்னும் பெயரையுடைய தத்துவாந்தரத்தினின்று முற்பத்திகூறியதும் அசங்கத மென்றனர். இப்படியுற்பத்திகள்கூறலா லிச்சித்தாந்தம் "ஜாமேகாம்லோஹிதசுக்ல கிருஷ்ணாம் பஹ்வீம்ப்ரஜாஜனயந்தீம்ஸரூபாம், அஜோஹ்யேகோஜுஷமாணோநுசேதே ஜஹாத்யேனாம்ஜுஹோமாஜோந்ய:" என்னுஞ் சுருதிகளுக்கு விருத்தமாமெனவும், இப்படியே மாயாதத்வத்தினின்றுஞ் சிவதத்வத்துக் குற்பத்தி கூறினமையால் அது "நித்யோநித்யானாம்" என்னுஞ்சுருதிகளுக்கு விருத்தமாமெனவும், காலதத்துவத்துக்கு மாயாதத்வத்திலுற்பத்தி கூறினமையால அது "ஜாதோஜாயமானோ" என்றதேத்யாதி சுருதிகளுக்கு விருத்தமாமெனவும் ஒருஜாமமவரை குலைத்தனர். மேலகாட்டிய (ஜாமேகாம்) என்னும்சுருதி வசனப்படிப் பதிபசுபாசங்களென்னும் பதார்த்தத்திரயங்களும் அநாதிநித்தமாயுள்ளனவாக நிச்சயமாயிற்று. பதார்த்தங்கள் மூன்றேநித்தமுமநாதியுமென்னுஞ் சுருதிவிரோதமாய் நாலாவதொரு பொருளுக்கு அநாதிநித்தியத்வங் கூறுதலசங்கதம். மேற்போந்த பதார்த்தங்கண் மூன்றுமஜனயபதார்த்தங்களும், ஒன்றிலொன்று விஜாதிகங்களுமாம். இவற்றுள் பதிசத்தாயுள்ளது. பாசமஅசத்தாயுள்ளது. பசுசத்தோடுசோந்தவழிசசத்தாயும், அசத்தோடு சோந்தவழி அசத்தாயு முண்மையில் சத்துமாகாமல் அசத்துமாகாமல் சதசத்தாயுள்ளது. இனிப்பதியாகியசிவன் ஞானக்கிரியாஸ்வருபனாய்ப் பசுவைஞானக் கிரியைகளாலும், பாசத்தைக்கேவலங்கிரியையாலு மியங்கப்பண்ணுவன். அப்படிபண்ணுங்கால் ஸ்வப்ரயோஜனங்கருதாது பரப்பிரயோஜனத்தையே திருவுள்ளமிசைந்தியற்றுங்கம்பரன் ஆணவகேவலத்திற் கிடந்தபசுக்களென்னுமெண்ணிறந்தவுயிர்களையு மவரவர்வினைக்கேற்ப மாயையைத் துணையாகச் சேர்த்து வெளிப்படுத்துவன்.

